தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணை எண். 75/பேரூ/2022

நாள் 05.07.2022

திருமதி. S. விஜயலட்சுமி,
சித்தோடு, ஈரோடு மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
படவீடு பேரூராட்சி, நாமக்கல் மாவட்டம் ... எதிர்மனுதாரர்

ஈரோடு மாவட்டம், சித்தோடு, எண்.199/1 செங்குந்தபுரம் மேற்கு வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. S. விஜயலட்சுமி என்பவரது 09.06.2022 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 13.06.2022ல் பெறப்பட்டு, 75/2022என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

ஈரோடு மாவட்டம், சித்தோடு, எண்.199/1 செங்குந்தபுரம் மேற்கு வீதி என்ற முகவரியைச் சேர்ந்த திருமதி. S. விஜயலட்சுமி தமது 09.06.2022 நாளிட்ட புகார் மனுவில் தனது கணவர் திரு. R. பாபுசாமி இராணுவத்தில் JCO-ஆக பணியாற்றி செப்டம்பர் 2019ல் ஓய்வு பெற்றார் எனவும், அதன் பிறகு இரண்டு வருடங்களாக அவருடைய சகோதரி லட்சுமி என்பவரது வீட்டில் (3/1–95 மரவம்பாளையத்தான்காடு, படவீடு (அஞ்சல்), நாமக்கல் மாவட்டம்) சகோதரி குடும்பத்தினர் மற்றும் சகோதரர்கள் முருகவேல் மற்றும் தங்கராஜ் ஆகியோருடன் வசித்து வந்தார் என்றும், தனது கணவர் 20.09.2021 அன்று மாலை 6.45 மணிக்கு இறந்துவிட்டார் என்றும், அவரது உடல் சேலம் மாவட்டம், சங்ககிரி வட்டம், மொத்தையனூர் அஞ்சல், கருமாபுரத்தனூர் கிராமத்தில் புதைக்கப்பட்டதாகவும், தனது

கணவரின் திடீர் மரணம் குறித்து அவரது சகோதரர்கள் தரப்பில் முறையான காரணங்கள் ஏதும் தெரிவிக்கவில்லை என்றும், தனது கணவரின் இறுதிச் சடங்கில் மனைவி என்ற முறையில் தன்னையும், தனது மகளையும் இறுதிச்சடங்குகள் மேற்கொள்ளவிடாமல் தனது கணவரது குடும்ப நபர்கள் இடையூறு ஏற்படுத்தினார்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். இதனால் தனது கணவரது மரணம் குறித்து தமக்கு சந்தேகம் எழுந்ததன் அடிப்படையில், தான் வெப்படை காவல் நிலையத்தில் 26.09.2021 அன்று புகார் அளித்ததாகவும், எனது புகாரின் அடிப்படையில் காவல் துறை எனது கணவரது குடும்ப உறுப்பினர்களிடம் மேற்கொண்ட விசாரணைக்குப் பின், படிவம் 4A நகல் (Medical Certificate for the cause of Death) ஒன்று வழங்கப்பட்டதென்றும், காவல்துறை வழங்கிய அறிவுரைக்கிணங்க தான் படவீடு பேரூராட்சி செயல் அலுவலரை அணுகி எனது கணவரின் இறப்புச் சான்றிதழை வழங்கிடக்கோரி மனு அளித்ததாகவும், படவீடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது கணவரது இறப்பு குறித்து காவல் துறையினால் அளிக்கப்பட்ட படிவம் 4A–வினை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டார் என்றும், இராணுவத்தில் பணிபுரிந்து மரணமடைந்த தனது கணவரின் இறப்புச் சான்றிதழை வழங்குவதற்கு காலதாமதமான நிலையில், தான் இது குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கும், தலைமைச் செயலாளருக்கும், நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் நாமக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோருக்கு 8.11.2021ல் மனு அளித்ததாகவும் தெரிவித்துள்ளார். காவல்துறை அறிவுறுத்தலின்பேரில் தான் படவீடு பேரூராட்சி செயல் அலுவலரை அணுகி தனது கணவரது இறப்புச் சான்றிதழை வழங்கக் கோரியதற்கு படவீடு பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் நேரடி விசாரணை மேற்கொண்டதில் திரு. ஆர். பாபுசாமி, த/பெ ரங்கசாமி என்பவர் சிகிச்சைக்காக கொண்டு சென்றபோது சேலம் விநாயகா மிஷன் மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர்திரு. ஆர். பாபுசாமி என்பவர் இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்தார் என்றும், எனவே, திருர். ஆர். பாபுசாமி என்பவரின் இறப்பானது படவீடு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நிகழவில்லை என்றும், எனவே மனுதாரருக்கு இறப்புச் சான்றிதழ் படவீடு பேரூராடசியின் மூலம் வழங்கிட இயலாது என்று தெரிவித்து தமக்கு கடிதம் அனுப்பியுள்ளதாகவும், 20.09.2021ல் மரணமடைந்துவிட்ட தனது கணவரது இறப்பினை பதிவு செய்து இறப்புச் சான்றினை படவீடு பேரூராட்சி செயல் அலுவலர் வழங்கிட விசாரணை மேற்கொண்டு ஆணைகளை பிறப்பிக்குமாறு கோரி இம்முறைமன்ற நடுவத்தில் புகார் மனு அளித்துள்ளார். மனுதாரர் தனது புகார் மனுவுடன் காவல் ஆய்வாளர், வெப்படை காவல் நிலையம், பள்ளிப்பாளையத்திற்கு அளித்த புகார் மனு, தனது கணவர் இறப்பு குறித்து காவல் துறையினால் தமக்கு அளிக்கப்பட்ட படிவம் 4A ன் நகல், குமாரபாளையம் வட்டாட்சியருக்கு அளித்த 16.11.2021 நாளிட்ட புகார் மனு, 24.11.2021 மற்றும் 14.12.2021ல் படவீடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளித்துள்ள மனு, படவீடு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரருக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதம் ந.க.எண்.105/2021 நாள் 12.1.2022 ஆகியவற்றின் நகல்களை தனது புகாருக்கான ஆதார ஆவணங்களாக இணைத்தனுப்பியுள்ளார்.

2. படவீடு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் மனுதாரர் ஆகியோர் 27.06.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ 15.06.2022 நாளிட்ட அழைப்பாணைகள் ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம்

அனுப்பப்பட்டன. மனுதாரர் மற்றும் படவீடு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர் 27.6.2022 அன்று இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளனர்:-

மனுதாரர் திருமதி எஸ். விஜயலட்சுமி அளித்துள்ள வாக்குமூலத்தில் "எனது கணவர் திரு. ஆர். பாபுசாமி அவர்கள் கடந்த 20.09.2021 அன்று காலமானார். படவீட்டில் அமைந்துள்ள அவரது அக்காவின் வீட்டில் காலமானதைத் தொடர்ந்து, அவருடைய வாரிசான நான் எனது கணவரின் இறப்பிற்குப் பின்னர் கிடைக்கவேண்டிய பணப்பயன்கள், குடும்ப ஓய்வூதியம் போன்றவற்றை பெறும்பொருட்டு எனது கணவரின் இறப்புச் சான்றிதழ் வேண்டி படவீடு பேரூராட்சியில் விண்ணப்பம் செய்தேன். விண்ணப்பத்துடன் வெப்படை காவல் நிலையத்தில் அளித்த புகாரின் அடிப்படையில் எனக்கு அளிக்கப்பட்ட படிவம் 4Aம் (Medical Certificate for the cause of death) சேர்த்து அனுப்பியிருந்தேன். ஆனால் படவீடு பேரூராட்சி செயல் அலுவலர் அவ்வலுவலக துப்புரவு மேற்பார்வையாளர் விசாரணை மேற்கொண்டதில், திரு. ஆர். பாபுசாமி, த/பெ ரங்கசாமி என்பவர் சிகிச்சைக்காக கொண்டுசென்ற போது சேலம் விநாயகா மிஷன் மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர் திரு. ஆர். பாபுசாமி, த/பெ ரங்கசாமி என்பவர் இறந்துவிட்டதாக தெரிவித்தார். எனவே, எனது கணவரின் இறப்பு படவீடு பேரூராட்சி எல்லையில் நிகழவில்லை என்று தெரிவித்து எனது கணவரின் இறப்புச் சான்றினை அளிக்க மறுத்து வருகிறார். படவீடு பேரூராட்சியில் அமைந்துள்ள அவரது அக்கா வீட்டில் எனது கணவர் திரு. பாபுசாமி இறந்த நிலையில், அவரது ஓய்வூதியம் மற்றும் பணப்பயன்களை அவரது வாரிசுதாரரான நான் பெறும்பொருட்டு மேற்கண்ட இறப்புச் சான்றிதழை படவீடு பேரூராட்சியிலிருந்து கிடைத்திட ஆவன செய்யுமாறு இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. நாமக்கல் மாவட்டம், படவீடு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. விஜயசங்கர் அளித்துள்ள வாக்குமூலத்தில் "மனுதாரர் திருமதி. எஸ். விஜயலட்சுமி என்பவரின் கணவர் திரு. பாபுசாமி என்பவர் படவீடு பேரூராட்சியில் உள்ள அவரது அக்கா வீட்டில் காலமானதாகத் தெரிவித்து, அவரது கணவரின் இறப்புச் சான்றிதழ் வேண்டி படவீடு பேரூராட்சியில் விண்ணப்பித்திருந்தார். இது குறித்து பேரூராட்சியின் துப்புரவு ஆய்வாளர் மேற்கொண்ட விசாரணையில் மனுதாரரின் கணவர் பாபுசாமி படவீடு பேரூராட்சி எல்லையில் இறக்கவில்லை என்றும், விநாயகா மிஷன் மருத்துவமனைக்கு பாபுசாமி கொண்டு செல்லப்பட்டதாகவும், அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் பாபுசாமி இறந்துவிட்டதாகவும் தெரிவித்ததைத் தொடர்ந்து, படவீடு எல்லையில் இறந்ததாக மனுதாரரின் கணவருக்கு படவீடு பேரூராட்சியின் மூலம் இறப்புச் சான்றிதழ் வழங்கிட இயலாது என மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மனுதாரரின் கணவர் பாபுசாமி என்பவரது உடல் சேலம் மாவட்டம், சங்ககிரி தாலுக்கா, கருமாபுரத்தனூர் என்கின்ற இடத்தில் புதைக்கப்பட்டதாக தெரியவருவதால், மேற்கண்ட கருமாபுரத்தனூர் பஞ்சாயத்தில் உரிய விசாரணை மேற்கொண்டு இறப்புச் சான்றிதழ் குறித்து உரிய விவரங்களை பெற்று இம்முறைமன்றத்தில் இன்னும் இரண்டு தினங்களில் சமர்ப்பிக்கிறேன் என்பதை

தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் எனது 24.6.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறைமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. படவீடு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் அளித்துள்ள 24.6.2022 நாளிட்ட விளக்க அறிக்கையில் திருமதி. விஜயலட்சுமி, செங்குந்தபுரம், சித்தோடு, ஈரோடு மாவட்டம் அவரது கணவர் திரு. ஆர். பாபுமாமி, த/பெ ரங்கசாமி என்பவரின் இறப்புச் சான்றிதழ் கோரி 28.9.2021ல் விண்ணப்பம் அளித்திருந்தார். மனுதாரர் இறப்புச் சான்றிதழ் கோரி அளித்த மனுவினை குமாரபாளையம் வட்டாட்சியர் அவர்கள் கடித எண்.2704/2021/அ1 நாள் 11.12.2021 மூலம் படவீடு பேரூராட்சிக்கு அனுப்பியிருந்தார். அக்கடிதம் குறித்து படவீடு பேரூராட்சி துப்புரவு மேற்பார்வையாளர் நேரடி விசாரணை மேற்கொண்டதில் திரு. ஆர். பாபுசாமி, த/பெ ரங்கசாமி என்பவர் கதவு எண்.95 மரவன்பாளையத்தான்காடு, படவீடு பகுதியில் கடந்த ஆறு வருடங்களாக வசித்துவந்ததாகவும், மேலும் அவர் ராணுவ பணியிலிருந்து ஓய்வுபெற்று உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் ஈரோடு அரசு மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சை பெற்றும், ஈரோடு மணியன் மெடிக்கல் சென்டர் தனியார் மருத்துவமனையில் 14 நாட்கள் சிகிச்சை பெற்ற பின்னர், மேலும் தீவிர சிகிச்சைக்காக 20.09.2021ல் சேலம் விநாயகா மிஷன் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும், அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் திரு. ஆர். பாபுசாமி இறந்துவிட்டதாக தெரிவித்ததாக திரு. ஆர். பாபுசாமி என்பவரின் அக்கா கணவர் திரு. பொ. காவேரியப்பன், த/பெ. பொம்மன்னன் என்பவரால் எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் தெரிவித்தார். இதுகுறித்து படவீடு பேரூராட்சியைச் சேர்ந்த மரவம்பாளையத்தான்காடு ஊர் பொதுமக்கள் 15.12.2021 நாளிட்ட விண்ணப்பத்தில் திரு. பாபுசாமி என்பவர் 20.09.2021 அன்று சேலம் விநாயகா மிஷன் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகவும், அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர் திரு. ஆர். பாபுசாமி இறந்துவிட்டதாக தகவல் தெரிவித்ததாகவும், அதன் பின் அவரது உடல் அவரது அக்கா வீட்டிற்கு கொண்டு செல்லப்பட்டு நல்லடக்கம் செய்யப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளனர் என்றும் இதன் நகலினையும் தனது அறிக்கையுடன் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளித்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, திரு. ஆர். பாபுசாமி, த/பெ. ரங்கசாமி என்பவரின் இறப்பானது படவீடு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நிகழவில்லை எனவும், ஆதலால் மனுதாரருக்கு இறப்புச் சான்றிதழ் படவீடு பேரூராட்சியின் மூலம் வழங்கிட இயலாத சூழ்நிலை உள்ளது என்றும், திருமதி. எஸ். விஜயலட்சுமி தனது கணவரின் இறப்புச் சான்றிதழை வழங்கிடக்கோரி படவீடு பேரூராட்சிக்கு விண்ணப்பித்திருந்ததன் அடிப்படையில் பேரூராட்சியின் 12.1.2022 நாளிட்ட கடிதம் மூலம் அவருக்கு பதில் அளிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நிலையில், திருமதி. எஸ். விஜயலட்சுமி என்பவரால் மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் தனிப்பிரிவிற்கு மனு எண்.TN/MAWS/NMK/I/ CMCELL/28JAN22/2992 142 நாள் 28.1.2022ல் அளித்திருந்த நிலையில், படவீடு பேரூராட்சியின் கடித எண்.ந.க.186/2021 நாள் 29.3.2022ல் பதில் வழங்கப்பட்டதாகவும், அதன் நகலினையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு தனது அறிக்கையுடன்

இணைத்தனுப்பிவைத்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் திருமதி. எஸ். விஜயலட்சுமி மக்கள் குறைதீர்க்கும் நாள் மனு எண்.3348756 நாள் 27.3.2022ல் மனு அளித்ததற்கு 18.4.2022ல் மனுதாரருக்கு பதில் வழங்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். திருச்செங்கோடு வருவாய் கோட்டாட்சியர் அவர்களது கடிதத்துடன் இணைத்தனுப்பப்பட்ட மனுவிற்கும் 16.6.2022ல் மனுதாரருக்கு பதில் வழங்கப்பட்டதாகவும் படவீடு பேரூராட்சி செயல் அலுவலர் தனது விளக்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட தகவல்களின் அடிப்படையில், திரு. ஆர். பாபுசாமி, த/பெ ரங்கசாமி என்பவரது இறப்பானது படவீடு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நிகழவில்லை என்பதால், திருமதி. S. விஜயலட்சுமிக்கு படவீடு பேரூராட்சியின் மூலம் இறப்புச் சான்றிதழ் வழங்கிட இயலாத சூழ்நிலை உள்ளது என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

5. படவீடு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு மறைந்த R. பாபுசாமி இறப்பு குறித்து மொத்தையனூர் பஞ்சாயத்து செயலரது அறிக்கையினைப் பெற்று மின்னஞ்சல் மூலமாக 30.6.2022 அன்று இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைத்துள்ளார். சங்ககிரி யூனியன், மொத்தையனூர் பஞ்சாயத்து செயலர் 29.6.2022 நாளிட்டு, படவீடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளித்துள்ள கடிதத்தில் "கடந்த 20.9.2021ஆம் தேதியில் எங்கள் பஞ்சாயத்திற்குட்பட்ட கருமாபுரத்தனூர் முருகவேல் என்பவருடைய அண்ணன் பாபுசாமி, த/பெ ரங்கசாமி (ராணுவ ஓய்வு பெற்றவர்) என்பவர் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டார் என்றும், படவீடு பேரூராட்சி மரவன்பாளையத்தான்காடு அக்கா வீட்டில் பிரேதம் உள்ளதாக கூறி பிரேதத்தை கருமாபுரத்தான் திறந்தவெளி மயானத்தில் புதைக்க தகவல் தெரிவித்தார். அதன்படி அவரது பூத உடல் புதைக்கப்பட்டது. எங்கள் அலுவலகத்தில் மயான பதிவேடுகள் எதுவும் பராமரிப்பில் இல்லை எனவும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

6. மனுதாரரின் புகார் மனு மற்றும் அதனுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள், அவரது வாக்குமூலம், வாக்குமூலத்துடன் கூடுதலாக வழங்கப்பட்ட ஆவணங்கள், நாமக்கல் மாவட்டம், படவீடு தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரது வாக்குமூலம், விளக்க அறிக்கை மற்றும் ஆவண நகல்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

- இந்திய ராணுவத்தில் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு. ஆர். பாபுசாமி தனது ஓய்வுக்குப் பின்னர் கடந்த இரண்டு வருடங்களாக அவருடைய சகோதரி லட்சுமி என்பவரது வீட்டில் (3/1–95 மரவம்பாளையத்தான்காடு, படவீடு (அஞ்சல்), நாமக்கல் மாவட்டம்) சகோதரி குடும்பத்தினர் மற்றும் சகோதரர்கள் முருகவேல் மற்றும் தங்கராஜ் ஆகியோருடன் வசித்து வந்த நிலையில் 20.09.2021ல் மரணமடைந்துவிட்ட நிலையில், அவரது சட்டப்படியான வாரிசுதாரர் திருமதி. S. விஜயலட்சுமி தனது

கணவரின் இறப்புச் சான்றிதழை பெற்றிட பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டுவந்துள்ள நிலையில், அவரது இறப்புச் சான்றிதழ் இதுவரை வழங்கப்படாததால், இம்முறைமன்ற நடுவத்திற்கு புகார் மனு அளித்துள்ளார்.

- கணவன் மற்றும் மனைவி ஆகியோருக்கிடையே நிலவிவந்த கருத்துவேற்றுமை காரணமாக மனுதாரர் திருமதி. S. விஜயலட்சுமி 199/1 செங்குந்தபுரம் மேற்குத் தெரு, சித்தோடு, ஈரோடு மாவட்டம் என்ற முகவரியிலும், அவரது கணவர் திரு.R. பாபுசாமி நாமக்கல் மாவட்டம், 3/1–95 மரவம்பாளையத்தான்காடு, படவீடு மற்றும் அஞ்சல் என்ற முகவரியில் அவரது சகோதரியின் வீட்டில் வசித்துவந்துள்ளதும் அறியப்படுகிறது.

- மனுதாரர் தனது கணவரின் மறைவுக்குப் பின் மேற்கொண்ட தொடர் நடவடிக்கைகளின் பயனாக மனுதாரருக்கு காவல் துறையினால் வழங்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ள படிவம் 4A–ன் நகல் (Medical Certificate for the cause of Death) மணியன் மெடிக்கல் சென்டர், 100 பவர் உறவுஸ் சாலை, ஈரோடு–1ன் Dr. S. Senthilkumaran, Medical Director என்பவரால் 20.09.2021ல் வழங்கப்பட்டுள்ளது தெளிவாகிறது.

- குமாரபாளையம் வட்டாட்சியர் மனுதாரரான திருமதி. எஸ். விஜயலட்சுமிக்கு அனுப்பியுள்ள குறிப்பாணையில் இறப்பு நிகழ்ந்த இடம் படவீடு பேரூராட்சிக்கு உட்பட்டதால் படவீடு பேரூராட்சி அலுவலகத்தை அணுகி மனுதாரரது கணவரின் இறப்புச் சான்றினை பெற்றுக்கொள்ளுமாறு தெரிவித்துள்ளார்.

- படவீடு பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஆர். பாபுசாமி என்பவர் சிகிச்சைக்காக சேலம் விநாயகா மிஷன் மருத்துவமனைக்கு கொண்டுசென்றபோது இறப்பு நிகழ்ந்ததாலும், மேற்கண்ட இறப்பானது படவீடு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நிகழவில்லை என்பதாலும், இறப்புச் சான்றிதழை படவீடு பேரூராட்சியின் மூலம் வழங்கிட இயலாது என பதில் அளித்துள்ளதும் தெளிவாகிறது.

- படவீடு பேரூராட்சியின் துப்புரவு மேற்பார்வையாளர் திரு. பாபுசாமி என்பவரது இறப்பு குறித்து மேற்கொண்ட விசாரணையில் அவரது இறப்பு படவீடு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நிகழவில்லை என்று 15.12.2021ல் அறிக்கை அளித்துள்ளதும் அதன் அடிப்படையில், படவீடு பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரருக்கு பதில் வழங்கியுள்ளதும் ஆவணங்கள் மூலம் தெரியவருகிறது.

- மறைந்த பாபுசாமியின் சகோதரியின் கணவர் P. காவேரியப்பன் என்பவர் படவீடு பேரூராட்சி செயல் அலுவலருக்கு அளித்துள்ள கடிதத்தில் பாபுசாமி தங்களுடன் கதவு எண்.95 மரவம்பாளையத்தான்காடு என்கின்ற முகவரியில் கடந்த ஆறு வருடங்களாக வசித்துவந்தார் என்றும், இவர் இராணுவ பணியிலிருந்து ஓய்வு

பெற்றவர் என்றும், உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் ஈரோடு அரசு மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சை பெற்றும், ஈரோடு மணியன் மெடிக்கல் சென்டர் என்ற தனியார் மருத்துவமனையில் 14 நாட்கள் சிகிச்சை பெற்றபின், மேலும் தீவிர சிகிச்சைக்காக விநாயகா மிஷன் மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்ட நிலையில், அங்கு பரிசோதித்த மருத்துவர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்ததால், அவரது உடல் அவரது அக்கா வீட்டிற்கு கொண்டுசெல்லப்பட்டது என்றும், அவருடைய இறப்பை விநாயகா மிஷன் மருத்துவமனையில் பெற்றுக்கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

- இறந்த பாபுசாமியின் நெருங்கிய உறவினர் அளித்துள்ள கடிதத்தின்படி, திரு. பாபுசாமி படவீடு பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள அவரது சகோதரி வீட்டில் வசித்து வந்துள்ளதோடு, மருத்துவ சிகிச்சையையும் மேற்கொண்டுள்ளார் என்பது தெளிவாக அறியப்படுகிறது

- அவ்வாறிருக்க, திரு. பாபுசாமியின் இறப்பு படவீடு பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் நிகழவில்லை என்று தெரிவித்து, மறைந்த ராணுவ வீரரின் மனைவியும், I.R.T.T கல்லூரியில் உதவிப் பேராசிரியையாக பணிபுரிந்துவருபவருமான மனுதாரரை மனிதாபிமான முறையில் நடத்திடாமல், கடந்த 9 மாதங்களாக எல்லைப் பிரச்சனையைக் காட்டி அலையவிட்டுள்ளது மனிதாபிமானமற்ற மற்றும் வருந்தத்தக்க செயலாகவே இம்முறைமன்ற நடுவத்தினால் கருதப்படுகிறது.

- மனிதாபிமான முறையில் பொது மக்களின் குறைகளை களைந்திடவும் முனைப்புடன் செயல் ஆற்றிடவும் வேண்டிய படவீடு பேரூராட்சி செயல் அலுவலர் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் வசித்துவந்த நபர் மருத்துவ சிகிச்சையின் அடிப்படையில் மேல் சிகிச்சைக்காக விநாயகா மிஷன் மருத்துவமனைக்கு எடுத்துச்சென்றபோது நிகழ்ந்த இறப்பினை காரணம் காட்டி அவரது இறப்பினை பதிவு செய்து இறப்புச் சான்று வழங்கிடாமல் இம்முறைமன்ற நடுவ விசாரணைக்கு வந்த பின்னரும், எல்லைப் பிரச்சனையை காரணம் காட்டி இறப்புச் சான்றிதழ் வழங்கிட இயலாது முடியாது என்று தெரிவித்துள்ளது ஏற்கத்தக்கதல்ல. பொதுமக்களுக்கு உதவிட வேண்டிய பேரூராட்சி செயல் அலுவலர் தமது கடமையை சரிவர சீரிய முறையில் ஆற்றிடும் வகையில் பணிசெய்ய முற்படவில்லை என்பதையே அவரது செயல் எடுத்துக்காட்டுகிறது. இதனை இம்முறைமன்ற நடுவம் வன்மையாக கண்டிக்கிறது.

7. இப்பொருள் குறித்து மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை ஆகியவற்றால் கீழ்க்கண்ட தீர்ப்புகளில் கருத்துரைகள் குறிப்பிடப்பட்டு தீர்ப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன:-

The Madurai Bench of Madras High Court in Writ Petition W.P (MD) No.10810 of 2016 filed by R. Sankarapandi vs. The Thoothukudi Municipal Corporation, Thoothukudi and another observed as follows:-

"8. xxxx xxxxxxx xxxxx

It is not stipulated either in Section 8 or in Section 9 or in Section (2) of the Act (Registration of Births and Deaths Act, 1969) that the informations to the Registrar must be in respect of death happening within the territorial jurisdiction of the concerned Registrar. It is also not indicated that the information has to be from within the territorial limits of the Registrar when he gives informations on births and deaths to the Registrar and it would mean that the information to the Registrar can come from an informant outside his territorial limits. when such is the admitted provisions envisaged by the legislature, in the case on hand, refusal by the first respondent to register the death of the deceased/petitioner's wife on the ground that the death has not taken place within his territorial jurisdiction, in my view, is oppressive and unjust and would defeat justice, especially when Dr.K.Mummoorthy, who examined the petitioner's wife, confirmed her death by certifying Form-4A, Medical Certificate of cause of death, dated 8.3.2016.

9. In Tessy P.Das v. Paippadu Grama Panchayat ((2007) Indlaw Ker 1921), the petitioner's husband therein died in Madurai in Tamil Nadu and the dead body was brought over to Paippadu Village and was buried at the Cemetry of St.Thomas Church, Paippadu. The Vicar of the Church has issued certificate in that regard. The widow made an application along with the said certificate for issurance of a death certificate, but the said application was rejected on the ground that the death occurred outside his jurisdictional limits viz., the area of Paippadu Grama Panchayat. On considering these factual aspects, a learned Judge of the Kerala High Court, while considering the helplessness of the Registrar on the ground that the death did not occur within his territorial jurisdiction and after considering the statutory provisions of Sections 7 to 10 of the Act, held that the Registrars appointed by the State Government under Section 7 of the Act for a given local area are competent to register births and deaths taking place outside the local areas provided information with regard to birth or death is duly notified to them under Section 8 or 10 of the Act and in such cases, the Registrar will have to be convinced regarding the identity of the child born or persons who is dead on the basis of dependable materials.

xxxx xxxxx xxxxx

11. If the contention of the respondents that they are legally entitled to deny the request for registration of death is accepted, the Country will not be able to record correct population statustics, since the population is one of the most dynamic factors in the present economy of the country for the

purpose of national planning, organizing public health and medical activities and thereafter for developing family planning programmes. Moreover, if any of the death taking place outside the State, District or outside the country is refused to be registered on the ground that the death had taken place outside the territorial jurisdiction, then the very purpose of collecting the accurate polulation census would be defeated. Therefore, the Registrar, while discharging his/her functions by acting on information given for death, is competent to act on informations irrespective of the territorial limits of his functioning, provided that the informations relate to a person who was a resident during his life time within the territorial limits of the said Registrar. Therefore, in the case on hand, the question of denial for registering the death of the petitioner's wife, who was admittedly residing within the jurisdiction of the first respondent/Thoothukudi Municipal Corporation, for want of territorial jurisdiction is totally irrelevant and uncalled for.

12. Thus, in the light of the aforesaid discussions and following the judgments stated supra, this Court hereby directs the first respondent to register the death of the petitioner's wife, namely, S. Jeyasri Selvi, in the register of Births and Deaths maintained by them, within a period of two weeks from the date of receipt of a copy of this order. Accordingly, the writ petition stands allowed. No costs.

8. The Hon'ble High Court of Judicature at Madras in Writ Petition W.P.No.18187 of 2010 filed by N. Vedantam Vs. the Executive Officer, Town Panchayat, Perungalathur, Chennai-63 observed as follows:-

xxxxx xxxxx xxxxx

"36. Whenever an information is given by the persons mandated under Sections 8 or 9 of the Act, he shall enter in the Register maintained for the purpose, all the information. As per Rule 6 of the abovesaid Rules, in respect of a birth or death in a moving vehicle, the person in-charge of the vehicle shall give or cause to be given the information under sub-section (1) of Section 8 at the first place of halt. Here again, the said rule speaks only about the person, who is statutorily bound to give the information of birth or death in a moving vehicle. Sections 8 or 9 or the rule 6 do not specifically state that only that Registrar, within whose jurisdiction, the birth or death occurred in a moving vehicle, is competent to register and no duty is cast on the Registrar, to whom, the information, is furnished by others about the death, even it occurred outside the territorial jurisdiction of his limits, to register the death. At this juncture, it is relevant to consider the power of the Registrar to obtain information regarding the birth or death, conferred upon him, under Section 21 of the Act, which states that

the Registrar may either orally or in writing require any person to furnish any information within his knowledge in connection with a birth or death in the locality within which such person resides and that person shall be bound to comply with such requisition. within his knowledge cannot be restricted to mean that only when information is given by such persons, mandated under the Act and the Rules, and not otherwise.

37. Merely because the Station Master, Kanpur, has not given the information to the first respondent, it cannot be said, no other person can furnish the information about the death, which occurred in the train. Sections 8 and 9 of the Act or Rule 6 of the Rules, only casts a duty on the persons to give information. The rule only casts a duty on the abovesaid person to furnish the information and does not prohibit any other person from giving an information. If such a narrow interpretation to the Sections and rule is given, then if the said persons fail to give information, then it cannot be contended that no registration of birth and death is permissible under the statutory provisions.

38. In view of the above, the contention that the respondents have no statutory duty to register the death of the petitioner's wife, within the State of Tamil Nadu, as the death had occurred in a moving train between New Delhi and Kanpur, is untenable.

39. In the light of the above discussion and following the judgements stated supra and of the factual admission on the part of the respondents in the counter affidavit the dead body of the petitioner's wife had been brought to Chennai and cremated within the jurisdiction of the first respondent, the impugned communications are set aside and there shall be a direction to the respondents to register the death of the petitioner's wife to issue the death certificate of late Mrs. Pankajam, wife of the petitioner, after obtaining a declaration from him for registration to the effect that the particulars sought to be registered are true and correct and that the particulars have not been registered anywhere else in India and also that the same does not run in conflict with particulars registered by any other authority outside India.

9. மாண்பமை உயர்நீதிமன்றங்கள் வெவ்வேறு வழக்குகளில் வழங்கியுள்ள மேற்கண்ட தீர்ப்புகளின் அடிப்படையில், ஈரோடு மாவட்டம், 199/1 செங்குந்தபுரம் மேற்கு வீதி, சித்தோடு என்ற முகவரியைச் சேர்ந்த மனுதாரர் திருமதி. S. விஜயலட்சுமி என்பவரது விண்ணப்பத்தினை ஏற்று, ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்று அதன் பின்னர் தனது சகோதரி குடும்பத்தினருடன் 3/1–95 மரவம்பாளையத்தான்காடு, படவீடு (அஞ்சல்), நாமக்கல் மாவட்டம் என்ற முகவரியில் வசித்துவந்த அவருடைய கணவர் (லேட்) R. பாபுசாமி என்பவர் 20.09.2021ல் மரணமடைந்துவிட்ட நிலையில், அவரது இறப்பு

குறித்து அளிக்கப்பட்டுள்ள படிவம் 4அன் (Medical Certificate for the cause of Death) அடிப்படையிலும் அவரால் அளிக்கப்படும் இதர விவரங்களின் அடிப்படையிலும் படவீடு பேரூராட்சியில் முறையான இறப்புப் பதிவுகளை மேற்கொண்டு, மறைந்த R. பாபுசாமியின் இறப்புச் சான்றிதழை (Death Certificate) உடனடியாக வழங்கிடுமாறு படவீடு பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. அவ்வாறு இறப்புச் சான்றிதழை அவருக்கு வழங்கிடும் முன்னர், மனுதாரரால் அளிக்கப்பட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மை மற்றும் மெய்த்தன்மைவாய்ந்தவை என்றும், அவர் தனது கணவரின் இறப்பு குறித்து வேறு எந்த பகுதியிலும் பதிவுகள் மேற்கொள்ளவில்லை என்பதை உறுதிமொழியாக (Declaration) பெற்றுக் கொண்டு இறப்புச் சான்றினை மனுதாரருக்கு வழங்கிடுமாறும், இது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறும் படவீடு பேரூராட்சி செயல் அலுவலர் அறிவுறுத்தப்படுகிறார்.

2022ஆம் ஆண்டு, ஜூலை திங்கள் 5–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒம்)/– x x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திருமதி. S. விஜயலட்சுமி, க/பெ (லேட்) R. பாபுசாமி,
199/1, செங்குந்தபுரம் மேற்கு வீதி, சித்தோடு, ஈரோடு மாவட்டம்–638 102
செயல் அலுவலர்,
படவீடு தேர்வுநிலை பேரூராட்சி, படவீடு, நாமக்கல் மாவட்டம்–637 308
மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்.
பேரூராட்சிகளின் உதவி [illegible] இயக்குநர், சேலம் மண்டலம், சேலம்

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)
நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

13/7/22
செயலாளர்
13.7.22